பக்கங்கள்:-11

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 17 | புதன்கிழமை | 29.01.2025 | அதிர்வு 180 |
|---|---|---|---|---|---|


## ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறும் மாவை

### வைத்தியர் சத்தியமூர்த்தி தகவல்

(எஸ்.நிதர்ஷன்)



இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் மூத்த தலை வரும் முன்னாள்

05

# மீனவர்கள் மீதான துப்பாக்கிப் பிரயோகம்: இலங்கைக்கு இந்தியா கடும் கண்டனம்!

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களைக் கைது செய் யும் நடவடிக்கையின்போது இலங்கைக் கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்ட சம்பவத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:–

“நெடுந்தீவுக்கு அருகாமையில் நேற்று அதிகாலை 13 இந்திய மீனவர் களைக் கைது செய்வதற்கான நடவடிக் கைகளின்போது இலங்கைக் கடற் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுள்ள சம்பவம்

06





# ஒற்றையாட்சி அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் தமிழருக்கு எதிர்காலம் இல்லாமல் போய்விடும்!

## கஜேந்திரகுமார் எம்.பி. பகிரங்க எச்சரிக்கை

(கி.வசந்தன்)

**“ஒற்றையாட்சி அரசமைப்பு நிறைவேற்றப்படு மாக இருந்தால் அதன்பின் கட்சிகள் தமிழ்த் தேசி யம் என்ற பெயரை வைப்பதாலும், தேசியம் பேசுவதா லும் எந்தப் பயனும் இல்லை. நானும் அரசிய லில் இருந்து ஒதுங்கி விடுவேன். அதன்பின் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் இல்லை. 76 வரு டப் போராட்டம் தோல்வி கண்டதாக முடியும். இந்த ஆபத்தைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண் டும்.”**

**- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

05

# பிரிட்டன் அமைச்சர் யாழ். வருகை முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு



(எஸ்.நிதர்ஷன்)

பிரிட்டனின் இந்து – பசுபிக் பிராந்தியத்துக்கான அமைச்சர் கெதரின் வெஸ்ட் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

06




‘சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி!’ என்ற மாதிரி தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு நடந்து கொள்கின்றது.

ராஜபக்ஷக்களுக்கு எதிராக ஏதேனும் நடவ டிக்கை எடுத்தாக வேண்டும் என்ற கட்டாயத தில், உப்புச்சப்பு இல்லாத விடயங்களைத் தூக் கிப்பிடித்து ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகப் பொலிஸ் துறையை ஏவி விடுகிறது அரசு என்ற எண்ணப்பாடு தென்னிலங்கையில் உருவாகும் விதத்தில் ஆட்சித் தலைமை நடந்து கொள் கின்றது.

அரசியலே வேண்டாம் என்று ஒதுங்கி இருப்பவர் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வர் ஜோஸித ராஜபக்ஷ. அவர் மீது காத்திரமில்லாத விடயங்களை ஒட்டி வழக்குகள், விசாரணைகளைத் தொடுத்து, அவரைப் பரபரப்பான பிரமுகராக்கி, அரசியலுக்கு இழுத்து வருவதற்கான ஆயத்தப் பணிகளை செய்து கொடுத்திருக்கிறது ஆட்சி தரப்பு. அரசியலே வேண்டாம் என்று தள்ளி நிற் கும் அவருக்கு எதிராக அரசு

05



# புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

உலகளாவிய ரீதியில் புதிதாக அடையாளம் காணப்படும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2040 ஆண்டளவில் 30 மில்லியனாக அதிகரிக்கக் கூடுமென சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியாக 2020ஆம் ஆண்டில் 19.3 மில்லியனாக இருந்த புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை, எதிர்வரும் 15 வருடங்களில் 30 மில்லியனாக அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் புற்றுநோய் தொடர்பான தேசிய தரவுகளுக்கு அமைய, நாட்டில் பதிவாகும் மரணங்களுக்கு நான்காவது பிரதான காரணியாகப் புற்றுநோய் விளங்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் மாத்திரம் 37,753 புற்றுநோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய புற்று நோய் தரவுகள் தெரிவிக்கின்றன.

அவர்களில், அதிகளவானோர் பெண்கள் எனவும் அந்த எண்ணிக்கை 20,171 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# காட்டு யானைகளின் இறப்பு வீதம் குறைவு

நாட்டில் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் காட்டு யானைகளின் இறப்பு வீதம் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் 388 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

அதே நேரத்தில் 2023 ஆம் ஆண்டில், 488 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 2024 ஆம் ஆண்டில் காட்டு யானைகளின் தாக்குதலால் 155 மனித இறப்புகள் பதிவாகியுள்ளன என வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.



# ஹரினி அமரசூரியவுடன் கேத்தரின் வெஸ்ட் சந்திப்பு

ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இந்து பசிபிக் பிராந்தியத்திற்கான வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் நிர்வாக மேம்பாட்டு அலுவலக அமைச்சரான கேத்தரின் வெஸ்ட், பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் வறுமை ஒழிப்பு, பிராந்திய அபிவிருத்தி மற்றும் பொருளாதார சமநிலை உள்ளிட்ட அரசாங்கத்தின் பிரதான முன்னுரிமை திட்டங்கள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கலுக்கான முயற்சிகள் மற்றும் “கிளீன் ஸ்ரீலங்கா“ வேலைத்திட்டம் ஆகிய விடயங்கள் தொடர்பில் இதன்போது கருத்துகள் பரிமாறப்பட்டுள்ளன.

இந்த சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் Andrew Patrick பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடு வழங்கும் பணி நாளை ஆரம்பம்

வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடு வழங்கும் பணி நாளை முதல் ஆரம்பமாகும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

6,234 விவசாயிகளுக்கு 166.7 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 13,376 ஏக்கர் சாகுபடி நிலங்களுக்கு இந்த இழப்பீடு முதல் கட்டமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காற்றின் தரம் குறைந்தது

பெரும்பாலான நகர்ப்புற பகுதிகளில் நேற்று காற்றின் தரமானது ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இன்று பிற்பகல் அளவில் இந்த நிலைமை சீரடையும் என எதிர்பார்ப்பதாக அதன் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் உள்ள பல நாடுகளில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நிலவும் வானிலையுடன் இலங்கையிலும் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலைக்கு சென்றுள்ளது. இதுவே இதற்கு காரணமாகும்.

சில நகரங்களில் காற்றின் தரம் அதிகளவில் மோசமடைந்துள்ளதுடன் சில கிராமப்புறங்களில் காற்றின் தரம் சீரான நிலையில் உள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

# எந்தவொரு விசாரணையிலும் அரசியல் தலையீடு இல்லை

## சட்ட மாஅதிபர் திணைக்களம் தெரிவிப்பு




முன்னெடுக்கப்பட்டுள்ள எந்தவொரு விசாரணையிலும் அரசியல் தலையீடு காணப்படவில்லை என சட்ட மாஅதிபர் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

பல விசாரணை கோப்புகள் மீதான விசாரணைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சில கோப்புகளின் விசாரணைகளில் சிறியளவிலான தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், தாமதமடைந்துள்ள கோப்புகளின் விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழு செயற்பட்டு வருவதாக சட்ட மாஅதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, அரசியல்வாதிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிரான குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக குறிப்பிட்ட சட்ட மாஅதிபர் திணைக்களம், மேற்படி அரசியல்வாதிகள் சர்ச்சைக் குரிய சம்பவங்களுடன் தொடர்பு பட்டுள்ளதாக விடயங்கள் வெளிவருகின்றன என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# பேரிச்சம்பழம் மீதான வரி குறைக்கப்பட்டது



பேரிச்சம்பழத்திற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தக வரியைக் குறைத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது காணப்படும் 200 ரூபா விசேட வர்த்தகப் பொருள்கள் வரி ஒரு ரூபா வரை குறைக்கப்படவுள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் வரிக்குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம்களின் நுகர்விற்காக சவுதி அரேபியா 50 மெட்ரிக் தொன் பேரிச்சம்பழங்களை இம்முறையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

மேற்படி பேரிச்சம்பழங்கள் நாட்டிற்கு கிடைத்துள்ளதாக தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்துள்ளார்.

அவற்றை பள்ளிவாசல்களுக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# கரையொதுங்கிய கடலாமைகளை பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்-நாகர்கோவில் மேற்கு கடற்பரப்பில் இறந்த நிலையில் கரையொதுங்கிய 2 கடலாமைகளை பரிசோதனைக்கு உட்படுத்த நீரியல் வள திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாகர்கோவில் மேற்கு கடற்கரையில் இறந்த நிலையில் 2 கடலாமைகள் கரையொதுங்கின.

நீரியல் வள திணைக்களத்துடன் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் கடலாமைகளை மீட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொண்டிருக்கும் கெடுபிடி நடவடிக்கைகளால் அவருக்கான ஆதரவுத் தளம் தெற்கில் அதிகரித்திருப்பதாகக் கருதும் மொட்டுக் கட்சியினர், அவரையும் அரசியல் களத்துக்கு முழுமூச்சாக இழுத்து வரும் அழுத்தத்தை இப்போது கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

மஹிந்தவின் மூத்த மகன் நாவல் ராஜபக்ஷவோடுகட்சிஅரசியலுக்குஜோஸிதவும் இனி வருவார் என்று தெரிகிறது.

ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக வலிமையாக நின்று பிடிக்கக் கூடிய வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியாத ஆட்சித் தலைமை உப்புச் சப்பில்லாத விடயங்களை ஒட்டிய வழக்குகளை அவர்களுக்கு எதிராக தொடுக்கின்றது. அதிலிருந்து ராஜபக்ஷக்கள் இலகுவாகத் தப்பி வெளியே வந்து விடுவர் என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. புதிய அரசின் 'கிளீன் சிறிலங்கா' திட்டம் என்பது ராஜபக்ஷக்கள் குற்றமற்றவர்கள் என்று அவர்களை 'கிளீன் ராஜபக்ஷக்கள்' என நிரூபிக்க வழி செய்யும் நடவடிக்கையாகத்தான் முடியப் போகின்றது என்கின்றார் அரசியல் அவதானி ஒருவர்.

மஹிந்த ராஜபக்ஷ இருக்கும் அரசு இல்லம் குறித்து அடிக்கடி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பொதுக் கூட்டங்கள் தோறும் பிரலபித்து வருகின்றமையால், அந்த வீட்டை விட்டு வெளியேறி, வசதியான தனி வீடு ஒன்றில் வாடகைக்குக் குடியிருக்க மஹிந்த ராஜபக்ஷ தயாராகி விட்டார் எனத் தெரிகிறது. அதற்காக அவருக்கு கொழும்பில் வீடு பார்க்கும் படலம் மும்முரமாக நடக்கின்றது. ஏற்கனவே இரண்டு, மூன்று வீடுகள் பார்த்துள்ளார்கள். இந்த வார இறுதியில் மஹிந்தர் நேரில் பார்த்து உறுதிப்படுத்தியதும் அவற்றில் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்தப்படும் எனத் தெரிகிறது. இப்போது இருக்கும் வீட்டிலிருந்து வெளியேறும்படி எழுத்து மூலம் மஹிந்த ராஜபக்ஷவை அரசு கோரியதும், அடுத்த ஓரிரு நாள்களில் தற்போதுள்ள அரசு இல்லத்தில் இருந்து மூடை, முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு அவர் புறப்படுவாரென்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் உறுதி கூறுகின்றன.

அரசு மேற்கொள்ளும் பழிவாங்கல் நடவடிக்கைகள் ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலத்துக்கு – புத்துயிர்ப்புக்கு – வழி செய்யும் என்றுதான் தோன்றுகின்றது.

நாளை மறுதினம் மொட்டுக் கட்சியின் நிறைவேற்று குழு கூட்டம் நடைபெற இருக்கின்றது. அதன் பின்னர் இவ்விடயங்களை ஒட்டி முக்கிய அறிவித்தல்கள் மொட்டுக் கட்சித் தரப்பிலிருந்து வரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

\+ \+ \+

மிகக் கடுமையான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவினுடைய உடல்நிலை குறித்து வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தியுடன் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் நேற்றிரவு தொலைபேசியில் உரையாடினார் எனத் தெரிகிறது.

மேலதிக சிகிச்சைக்காக மாவை சேனாதிராஜாவை சென்னைக்கு அல்லது சிங்கப்பூருக்கு விமானம் மூலம் கொண்டு செல்ல வாய்ப்பு உண்டா என்பது குறித்து அவர் டாக்டர் சத்தியமூர்த்தியிடம் விரிவாகக் கேட்டறிந்தார் எனத் தெரியவந்தது.

மாவை சேனாதிராஜாவின் உடல் நிலையில் முன்னேற்றம் இருக்குமானால் அது பற்றி கவனிக்கலாம் என்றும், இப்போதுள்ள நிலையில் அவருக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வசதிகள் யாழ்ப்பாண வைத்திய சாலையில் உள்ளன என்றும் டாக்டர் சத்தியமூர்த்தி பதிலளித்தார் எனத் தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் காலமான போது அவரது இறப்பு வீட்டுப் பக்கமே தலை வைத்துப் படுக்காத தமிழ் தேசிய கட்சிகள் எல்லாம் மாவை சேனாதிராஜாவின் சுகவீனம் பற்றிய தகவல் வெளியானதும் விழுந்தடித்து ஆஸ்பத்திரியில் பிரசன்னம் தந்திருக்கின்றமை குறித்து கட்சியின் சில வட்டாரங்கள் சிரத்தையுடன் கவனிப்பதந்த் தெரிகிறது.

2020 பொதுத்தேர்தலை அடுத்து, வாக்கு எண்ணிக்கை இடம் பெற்ற யாழ் மத்திய கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட 'அரசியல் தெருக்கூத்து' போன்ற ஒன்றை மாவை சேனாதிராஜாவின் சுகவீனத்தை வைத்தும் அரசியல் நாடகமாக நடத்துவதற்கு சில தரப்புக்கள் தயாராகின்றன என்று தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தங்களுக்குள் எச்சரிக்கை உணர்வோடு பேசிக்கொண்டமையை அறிய முடிந்தது. அதற்கு ஏற்றாற் போல சமூக ஊடகப் பதிவுகளை சில தரப்புகள் முன்னெடுப்பதையும் அந்த வட்டாரங்கள் ஊன்றிக் கவனிக்கின்றன என அறிய முடிந்தது.

எதை, எதை வைத்து அரசியல் செய்வதென்று இல்லாத அபத்த நிலைக்கு தமிழ அரசியல் சென்று கொண்டிருப்பது நம் தலையெழுத்தாகிவிட்டது...!

---

## ஒற்றையாட்சி அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய அரசமைப்பு தொடர்பில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்குத் தெளிவூட்டும் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணிகளான காண்டீபன், சுகாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசானது அறுதிப் பெருமபான்மையுடன் உள்ளது. இந்த அரசு மக்கள மத்தியில் தனது இருப்பைத் தக்க வைக்க ஏதாவது செய்ய வேண்டியுள்ளது. அதனடிப்படையில் விரைவாக ஓர் அரசமைப்பைக் கொண்டு வர வாய்ப்புள்ளது. அறுதிப் பெரும்பான்மையுடன் இருப்பதால் இந்த அரசு கொண்டு வரும் அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும்.

வடக்கு – கிழக்கு ரீதியில் 19 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதில் தேசியம் என்ற அடிப்படையில்10பேர்இருக்கின்றோம்.குறைந்தபட்சம் இந்த அரசு கொண்டு வரும் ஒற்றையாட்சி அரசமைப்பை தேசியம் பேசுகின்ற 10 பேராவது எதிர்க்காவிட்டால் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவுடன் இரு நிறைவேற்றப்பட்டது எனக் கருதப்படும். அதன் பின் நாம் தேசியம் பேசிப் பயனில்லை.

குறிப்பாக இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து 3 அரசமைப்பு சீர்திருத்தங்களை எமது தமிழ்த் தலைமைகள் எதிர்த்து வந்துள்ளனர். அதன் காரணமாகவே தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்பட வில்லை என்ற நிலை சர்வதேச சமூகம் மத்தியில் உள்ளது.

புதிய அரசமைப்பைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்றுக்கொண்டால் 76 வருடங்களாகத் தமிழ்த் தலைமைகளும், விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காகச் செய்த அத்தனை தியாகங்களும் வீணாகிவிடும்.

எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள ஒன்று சேர்ந்து ஒற்றையாட்சி அரசமைப்பை எதிர்த்து வடக்கு – கிழக்கு தமிழர் தேசம் என அங்கீகரிக்கப்பட்ட, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையுடன கூடிய ஒரு அரசமைப்பைக் கோர வேண்டும். நாடு பிரிக்கப்படாது அது வழங்கபடுமாக இருந்தால் சமஷ்டி ஊடாக மட்டுமே அதனை வழங்க முடியும். எனவே, அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும்.

அத்துடன், ஒற்றையாட்சி அரசமைப்பை நடைமுறைக்குக் கொணடு வந்தால் அதனைச் சர்வஜன வாக்குரிமைக்கு விட வேண்டும். இதன்போது வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை உணர்ந்து ஒற்றையாட்சி அரசமைப்பை எதிர்க்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள மீது உள்ள வெறுப்பால் பாடம் புகட்ட வேண்டும் எனக் கடந்த தேர்தல்களில் வேறு கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் மக்கள் வாக்களித்திருந்தாலும் கூட, அரசமைப்பு விடத்தில் ஒன்றுபட வேண்டிய தேவை உள்ளது. இது எமது அடிப்படை உரிமைப் பிரச்சினை. அதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேணடும். ஊடகங்கள் அதனை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்." – என்றார்.

---

## ஆபத்தான நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வீட்டில் தவறி தலை அடிபட வீழ்ந்த மாவை சேனாதிராஜா, நேற்றுக் காலை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார்.

சி.ரி. ஸ்கான் பரிசோதனையில் அவரின் தலையில் கணிசமான அளவில் இரத்தப் பெருக்கு இருப்பதை வைத்திய நிபுணர்கள் கண்டறிந்தனர்.

அவருக்கு மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக ஆபத்தான நிலையில் செயற்கைச் சுவாச உதவியுடன் சிகிச்சையில் உள்ளார்." – என்றார்.


**காணி விற்பனைக்கு**

சுழிபுரம் மூளாய் பகுதியில் சுற்று மதிலுடன் 10 பரப்பு காணியில் அமைந்த 4 அறைகள் 2 குளியல் அறைகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு :-**
**+94 772378718**

# சிறுவர்கள் தொடர்பாக 8,746 முறைப்பாடுகள் பதிவு

2024 ஆம் ஆண்டில் சிறுவர்கள் தொடர்பாக 8,746 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அவற்றில் 580 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பானவை எனவும், 321 முறைப்பாடுகள் சிறுவர் மீதான கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானவை எனவும் அந்த அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அவற்றில் சிறுவர்களின் பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பாக 2,746 முறைப்பாடுகளும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் 1,950 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிறுவர்களை யாசகம் பெறுவதற்காகப் பயன்படுத்தியமை தொடர்பில் 229 முறைப்பாடுகளும் வர்த்தக நோக்கங்களுக்காகச் சிறுவர்களை பாலியல் ரீதியில் பயன்படுத்தியமை தொடர்பில் 25 முறைப்பாடுகளும், சிறுவர் திருமணங்கள் தொடர்பாக 14 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சட்ட ஆதரவை வழங்கும் முயற்சியில், இலவச சட்ட சேவைகளை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதற்காக, துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதிமன்றங்களில் முன்னிலையாக விரும்பும் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளிடம் இருந்து விண்ணப்பங்களை அந்த அதிகாரசபை கோரியுள்ளது.

# மாவையைப் பார்வையிட்ட கஜேந்திரகுமார் அணி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சென்று பார்வையிட்டனர்.

மாவை சேனாதிராஜாவை முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் சென்று பார்வையிட்டனர்

இதன்போது மாவை சேனாதிராஜாவின் உடல் நலம் குறித்து அவரது மகனிடம் விசாரித்ததுடன் மகனுக்கு ஆறுதலும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.











## மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த மீன்பிடிப் படகில் இருந்த 13 மீனவர்களில் இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, சிறு காயங்களுக்குள்ளான ஏனைய மூன்று மீனவர்களுக்கும் அதற்காகச் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மீனவர்களைப் பார்வையிட்ட யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் காரியாலய அதிகாரிகள், அவர்களை நலன் விசாரித்து அவர்களது தேவைகள் குறித்து அறிந்துகொண்டு மீனவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்குமான சகல சாத்தியமான உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

புதுடில்லியில் உள்ள இலங்கையின் பதில் உயர் ஸ்தானிகர் நேற்றுக் காலை வெளியுறவுத்துறை அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இந்தச் சம்பவம் தொடர்பாக கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொழும்பில் உள்ள எமது உயர் ஸ்தானிகராலயம் இவ்விடயம் தொடர்பாக இலங்கை அரசின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

வாழ்வாதாரம் தொடர்பான அக்கறையைக் கவனத்தில் கொண்டு மீனவர்கள் விவகாரத்தைப் பரிவுடனும் மனிதாபிமான அடிப்படையிலும் அணுக வேண்டியதன் அவசியத்தை இந்திய அரசு எப்பொழுதும் வலியுறுத்தி வருகின்றது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எக்காரணத்துக்காகவும் பலத்தைப் பயன்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பாக இரு நாடுகளினதும் அரசுகள் இடையில் ஏற்கனவே உள்ள புரிந்துணர்வுகள் மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்." – என்றுள்ளது.

## பிரிட்டன் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் பொது சன நூலகத்துக்கு விஜயம் செய்த பிரிட்டன் அமைச்சர் அங்கு வடக்கு மாகாண ஆளுநர், வர்த்தகர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிரிட்டன் அமைச்சருடன் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ட்ரு பற்றிக்கும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

பிரிட்டன் – இலங்கை உறவுகளை வலுப்படுத்தவும், வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கிலும் பிரிட்டன் அமைச்சரின் விஜயம் அமைந்துள்ளது.



# உத்தரப்பிரதேச மத நிகழ்வின் போது மோடை இடிந்து வீழ்ந்து 5 பேர் பலி

உத்தரப்பிரதேசத்தின் பாக்பத்தில் நடைபெற்ற ஜெயின் சமூக நிகழ்வொன்றின் போது, அமைக்கப்பட்டிருந்த மோடை இடிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாக்பத்தின் பாகூரில் நடைபெற்ற மத நிகழ்வின் போது மூங்கில் மற்றும் மரத்தால் செய்யப்பட்ட தற்காலிக மேடை இடிந்து விழுந்ததில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

நேற்று காலை நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஜெயின் துறவிகள் முன்னிலையில் ஆதிநாதருக்கு பிரசாதமாக லட்டுகளை வழங்குவதற்காக ஸ்தலத்திற்கு வந்தனர்.

இதன்போது, பக்தர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட தற்காலிக மேடை அவர்களின் எடையை தாங்க முடியாது இடிந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்தில் ஏற்கனவே 108 நோயாளர் காவுவண்டிகள் சேவையில் இருந்ததால், காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர் என கூறப்படுகிறது.

காயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக முதல்வர் யோகி ஆதித்யநாத் குறிப்பிட்டுள்ளார்.

# அடுத்த மாதம் அமெரிக்கா செல்கின்றார் பிரதமர் மோடி

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பதவியேற்பின் பின் நேற்று முன்தினம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான தனது முதல் தொலைபேசி அழைப்பின் போது இந்தியாவும் அமெரிக்காவும் நியாயமான வர்த்தக உறவை வளர்த்துக் கொள்ள அழைப்பு விடுத்தார்.

உலகின் முதல் இரண்டு பெரிய ஜனநாயக நாடுகளின் தலைவர்களுக்கிடையேயான இந்த உரையாடலின் போது, இரு தரப்பினரிடையேயான ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், ஆழப்படுத்துதல் மற்றும் இந்தோ-பசுபிக், ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் பாதுகாப்பு உட்பட பல பிராந்திய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் வெள்ளை மாளிகை கூறியது.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை இந்தியா வாங்குவதை அதிகரித்து, நியாயமான இருதரப்பு வர்த்தக உறவை நோக்கி நகர்வதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ட்ரம்ப் இதன்போது வலியுறுத்தினார்.



நட்பின் வலிமையை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், பிரதமர் மோடி வெள்ளை மாளிகைக்கு வருகை தரும் திட்டங்கள் தொடர்பிலும் இரு தலைவர்களும் விவாதித்ததாக கூறப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு குறித்து பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய ட்ரம்ப், குடியேற்றம் குறித்தும் பேசியதாகவும், எதிர்வரும் பெப்ரவரியில் மோடி அமெரிக்கா வருவார் என்றும் கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நான் அவருடன் நீண்ட நேரம் பேசினேன். அவர் அடுத்த மாதம், அநேகமாக பெப்ரவரியில் வெள்ளை மாளிகைக்கு வருவார் என எதிர்பார்க்கிறேன். இந்தியாவுடன் எங்களுக்கு நல்ல உறவு உள்ளது,

சட்டவிரோதமாக அமெரிக்காவிற்கு வந்த இந்திய குடியேற்றவாசிகளை திரும்ப அழைத்து வரும் விவகாரத்தில், பிரதமர் நரேந்திர மோடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசுக்கு இது போதாத காலம்

நாட்டு மக்கள் பொருளாதாரப் பிரச்சினைகளாலும், விலைவாசி உயர்வினாலும், அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாட்டினாலும் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற போது, அந்தவிடயங்களுக்குநிவாரணம்-தீர்வு-பெற்றுக் கொடுப்பதை விடுத்து, நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் மூவர் தங்கி இருக்கும் அரச இல்லம் குறித்து பெரும் எடுப்பில் பிரசாரம் செய்து வருகிறது அநுர குமார திஸநாயக்கவின் அரசு.

தான் பங்குபற்றும் ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் பேசுவதை விட்டு, முன்னாள் ஜனாதிபதிகள் வசிக்கும் அரச இல்லங்கள் குறித்து ஆரவாரம் பண்ணி வருகிறார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

நிறைவேற்றதிகாரத்தைக் கையில் வைத்திருக்கிறார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க. நாடாளுமன்றத்தில் போதிய பலம் - மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வலிமை - அவரது அரசுக்கு இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் வசதிகள், சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்கள் அளவுக்கு மீறியவை என்றால், உரிய சட்டங்களைக் கொண்டு வந்து சட்டரீதியாக அவை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதை விடுத்து, 'குரங்கின் கைப் புண் மாதிரி' அந்த விடயத்தைத் தொடர்ந்து பொது வெளியில் அர்த்தமின்றி நோண்டிக் கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி.

மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகள், நெருக்கடிகள் பல இருக்கையில், அவற்றைத் தீர்ப்பதை விடுத்து, தேவையற்ற இந்த விவகாரத்தில் அதிக கவனம் செலுத்துவது அர்த்தமற்ற நடவடிக்கை.

மக்களின் அத்தியாவசிய - அன்றாட - பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கூறாமல், மக்களின் கவனத்தை வேறு பக்கம் திசை திருப்பும் இலக்கோடு இவ்வாறு ஜனாதிபதி நடந்து கொள்கின்றார் என்று மக்கள் கருதும் நிலைமை வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கி வரும் வசதி வாய்ப்புகள் குறைக்கப்படும் என்று தேர்தல் காலத்தில் அநுர குமார திஸநாயக்க வாக்குறுதி கொடுத்திருந்தார் என்பது உண்மைதான். அதே சமயம் மக்களின் அன்றாட - அத்தியாவசிய - பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண்போம் என்றும் அவர் வாக்குறுதி கொடுத்திருந்தார்.

இந்த இரண்டாவது வாக்குறுதி தொடர்பில் காத்திரமாக எதுவும் செய்யாமல், முன்னாள் ஜனாதிபதிகளின் இல்லம் குறித்து அதிகம் அலட்டிக் கொள்வது, மக்களின் பிரதான பிரச்சினையைக் கவனிக்காமல் கவனத்தை வேறு விடயத்தில் திசைதிருப்பும் எத்தனமாகவே அர்த்தப்படுத்தப்படுகின்றது.

இதுவரை இருந்த அரசுகளை தாறுமாறாக விமர்சித்து, சுதந்திரத்தின் பின்னான 75 ஆண்டுகால அரசுகளையும் கரித்துக் கொட்டி, அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி, அன்றாட - அத்தியாவசிய - பிரச்சினைகளில் இருந்து மக்களை விடுவிக்கக் காத்திரமான எதையும், தான் அதிகாரத்துக்கு வந்து கடந்த மூன்று மாத காலத்தில் செய்யவே இல்லை என்பதுதான் யதார்த்தப் புறவுண்மையாகும்.

இந்தப் பிரச்சினைகளில் இருந்து மக்களையும் நாட்டையும் விடுவிப்போம் என்ற தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதியை நம்பி, அவர்களுக்கு கடந்த இரண்டு தேர்தல்களிலும் தேவைக்கு அதிகமாக வாக்குகளை அள்ளிக் கொட்டிய மக்கள், இந்த நெருக்கடியில் இருந்து தங்களுக்கு நிவாரணம் - தீர்வு - கிடைக்கும் என்று முழுமையாக நம்பினர்.

ஆனால் மக்களின் வாக்குகளை தாம் அள்ளி வீசிய வாக்குறுதிகள் மூலம் சுருட்டி கொண்ட தேசிய மக்கள் சக்தியினர், கடந்த 75 ஆண்டுகளாக மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த தரப்புகளில் இருந்தும் தாங்கள் வேறுபட்டவர்கள் என்பதை நிரூபிக்கத் தவறியிருக்கின்றனர். அது மாத்திரமல்ல, அந்த முன்னாள் ஆட்சியாளர்கள் வகையறாவைச் சேர்ந்த - ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் - தாங்கள் என்பதையும் வெளிப்படுத்தும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

இந்தப் போக்கில் தேசிய மக்கள் சக்தியின் அரசாட்சி தொடருமானால், அடுத்த இரண்டு மாதங்களில் நடக்கக்கூடிய உள்ளூராட்சித் தேர்தலிலேயே பலத்த அடியை அவர்கள் மக்களிடம் சந்திக்க வேண்டி நேரும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகலாம்.

# விடுவிக்கப்படவிருந்த 33 இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 8 பேர் உயிரிழப்பு






காசா போர் நிறுத்த ஒப்பந்தத் திற்கமைய முதல் கட்டமாக விடுவிக் கப்படவிருந்த 33 இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஷபணயக் கைதிகள் தொடர்பான ஹமாஸின் பட்டியலை மேற்கோள் காட்டி இஸ்ரேல் அரசாங்க ஊடக பேச்சாளர் டேவிட் மென்சர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஏனைய 25 பேர் உயிருடன் இருக்கின்றனர் என ஹமாஸ் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸிடமிருந்து பணயக் கைதிகளின் தகவல்களைப் பெற்ற இஸ்ரேல், அவர்களின் நிலைமை குறித்து குடும்பங்களுக்கு அறிவித்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், முதல் கட்டமாக விடுவிக்கப்படவிருந்த பணயக் கைதிகளில் ஒரு தொகுதியினர் நாளையும் மற்றுமொரு தொகுதியினர் எதிர்வரும் சனிக்கிழமையும் விடுவிக்கப்படவுள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# ரஷ்யாவின் தயாரிப்பான சுகோய் 35 போர் விமானங்களை வாங்கிய ஈரான்



ஈரான் ரஷ்ய தயாரிப்பான சுகோய்-35 போர் விமானங்களை வாங்கியுள்ளதாக இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் (IRGC) தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரானுக்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பு குறித்து மேற்கு நாடுகளில் அதிகரித்து வரும் கவலைகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

ஈரானிய அதிகாரி ஒருவர் Su-35 ஜெட் விமானங்களை வாங்குவதை உறுதி செய்வது இதுவே முதல் முறை.

எனினும், எத்தனை ஜெட் விமானங்கள் வாங்கப்பட்டன, அவை ஏற்கனவே ஈரானுக்கு வழங்கப்பட்டதா என்பது போன்ற விடயங்களை ஐசுபுஊ தளபதி அலி ஷத்மானி அவரது அறிவிப்பில் தெளிவுபடுத்தவில்லை.

2023 நவம்பரில் ஈரானின் Tasnim செய்தி நிறுவனம், ரஷ்ய போர் விமானங்களை வாங்குவதற்கான ஏற்பாடுகளை தெஹ்ரான் முடித்துள்ளதாகக் கூறியது.

இந்த மாத தொடக்கத்தில், ஈரானும் ரஷ்யாவும் ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மையில் கையெழுத்திட்டன.

இது ஆயுத பரிமாற்றங்களைக் குறிப்பிடவில்லை, ஆனால் இரு நாடுகளும் தங்கள் “இராணுவ-தொழில்நுட்ப ஒத்துழைப்பை” மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டது என்று கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பாவில் தமது பானங்களை திரும்பப் பெறும் கோக கோலா



குளிர்பானங்கள் தயாரிப்பு நிறுவனமான கோக கோலா (Coca-Cola) ஐரோப்பா முழுவதும் உள்ள சில நாடுகளில் அதன் பானங்களில் “குளோரேட்டு” எனப்படும் அதிக அளவு இரசாயனங்கள் இருப்பதால் அவற்றை திரும்பப் பெறுவதாக பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தயாரிப்புகளில் கோக், ஃபாண்டா, மினிட் மெய்ட், ஸ்ப்ரைட் மற்றும் டிராபிகோ பிராண்டுகள் அடங்கும் என்று கோக கோலாவின் சர்வதேச பாட்டில் மற்றும் விநியோக நடவடிக்கையின் பெல்ஜியக் கிளை தெரிவித்துள்ளது.

2024 நவம்பர் முதல் பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, லக்சம்பர்க் மற்றும் நெதர்லாந்தில் அதிக அளவு குளோரேட்டு கொண்ட கேன்கள் மற்றும் கண்ணாடி போத்தல்களில் கோகோ கோலா பானங்கள் விநியோகிக்கப்படுவதாக நிறுவனம் திங்களன்று தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் உள்ள ஏதேனும் கோகோ கோலா தயாரிப்புகளில் அதிக அளவு குளோரேட்டு உள்ளதா என ஆய்வு செய்து வருவதாக உணவு தர நிர்ணய நிறுவனம் உறுதி செய்துள்ளது.

குளோரேட்டு உணவுகளில் காணப்படுகிறது, ஏனெனில் இது நீர் சுத்திகரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதலில் பரவலாக பயன்படுத்தப்படும் குளோரின் கிருமிநாசினிகளிலிருந்து பெறப்படுகிறது.

அதிக அளவு இரசாயன கலவையை வெளிப்படுத்துவது தைராய்டு பிரச்சினைகளை ஏற்படுத்தும். குறிப்பாக சிறுவர்களிடையே உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

2015 ஆம் ஆண்டின் அறிவியல் கருத்துப்படி, குளோரேட்டின் நீண்ட கால வெளிப்பாடு சிறுவர்களுக்கு, குறிப்பாக இலகுவான அல்லது மிதமான அயோடின் குறைபாடு உள்ளவர்களுக்கு உடல்நலக் கவலையை ஏற்படுத்துவதாக ஐரோப்பிய உணவு பாதுகாப்பு ஆணையம் கூறியது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.01.2025




இன்றைய நாள் உங்களுக்கு சாதக மான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணி யில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதிக ரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களின் உற்சாகமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக்காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மன நிலையில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை கவனமுடன் கையாள வும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷ யங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டி யது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டி யது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந் துணர்வு காணப்படும்.

சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். பணத்தை அதிகமாக சம்பாதிப்பதற்கும் சேமிப்பதற்கும் வாய்ப்பு குறைவு.




இன்று வெற்றிகரமான நாளாக அமை யும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப் பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங்க-ளின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி கார ணமாக திடமாக இருப்பீர்கள்.




இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப் படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப் பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப் பதில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. என்றாலும் உங்கள் உடன் பிறப்புகளின் நலனுக்காக பணம் செலவு செய்ய வேண்டி நேரும்.




இன்று நற்பலன்கள் கூடுதலாக கிடை-க்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன் களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதி காரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள் வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதி யின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல் கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி யும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப் படும். இந்தப் பயணம் உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும். நீங்கள் அதிகப்படியாக வருத்திக் கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.01.2025




இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள் வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக் கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள நீங்கள் நேர்மறை எண்ணத் துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணி யில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல் லாவற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வரகை உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டு வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெறும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும் இன்று நீங்கள் தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




நீங்கள் அறிவு பூர்வமாக செய லாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன் றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிக மாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல்லை கள் காணப்படும்.

# கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவிற்கான திகதி அறிவிப்பு



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையி லான உறவுப்பாலமாக கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா போற்றப்படுகின்றது.